முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 53/2023

வாதி தரப்பு சாட்சி- 1 சுப்பிரமணியன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.12.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி தனது வழக்கறிஞர் இல்லாமலும் தன்னை கேள்வி கேட்க ஆட்சேபனை இல்லை என கூறியதின் பெயரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. பிரதிவாதி தரப்பு பதிலுரை விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பதிலுரையில் என்ன கட்சி செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரிய மனுவும், இடைக்கால உறுத்துக்கட்டளை கோரிய மனுவும் எனது ஆஜர் இன்மை காரணத்தால் தள்ளுபடியான விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் இவ்வழக்கில் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள குறியீடு செய்யப்படாத புகைப்படத்தில் உள்ள பாதை அமைப்பு பக்கத்தில் சக்தி ஆறுமுகம் த/பெ.மாணிக்கம் என்பவரது நிலத்தில் உள்ளது என்றும், அதை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ததால் அந்த விவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் நீதிமன்ற ஆணையர் மனுவை தள்ளுபடிக்கு விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ படித்துள்ளேன்.

2. 2 ம் வாதிக்கு சார்பாக வழக்கை நான் நடத்துவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் கிழமேல் வண்டிப்பாதை என எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றும், தென்வடல் வண்டிப்பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிழமேல் பாதை என குறிப்பிட்டுள்ள நிலத்தின் சர்வே எண் 527/1, 527/2 வழியாக என குறிப்பிடப்படவில்லை என்றால் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனது ஆவணத்தில் மாமூல் பாதை என கண்டுள்ளது என்றால் மாணிக்க வாத்தியார் நிலம் வழியாக மாமூல் பாதை என கண்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாணிக்க வாத்தியார் என எந்த இடத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மாணிக்கம் என கண்டுள்ளது. நான் கிரையம் வாங்கிய தேதி என்ன என்றால் 11.07.1996 ஆகும். மாணிக்கம் கிரையம் வாங்கியது 19.07.2000 என்றால் மாணிக்கம் பெயரில் தான் பட்டா இருந்தது. மாணிக்கம் தான் அனுபவம் செய்தார். நான் தாவா சொத்தை அருக்காணி அம்மாளிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**